# கிறிஸ்துவைப் போன்ற போதனையின் மேம்போக்கான பார்வை

**இயேசு கிறிஸ்துவில் கவனம் செலுத்துங்கள்**

| நீங்கள் எதைக் கற்பித்தாலும் அதைப் பொருட்படுத்தாது இயேசு கிறிஸ்துவைப்பற்றி கற்பியுங்கள் | இயேசு கிறிஸ்துவண்டை வர கற்பவர்களுக்கு உதவுங்கள் |
|---|---|
| இயேசு கிறிஸ்துவின் எடுத்துக்காட்டை வலியுறுத்துங்கள் | தங்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய அன்பை, வல்லமையை மற்றும் இரக்கத்தை அடையாளம் காண கற்பவர்களுக்கு உதவுங்கள் |
| இயேசு கிறிஸ்துவின் பட்டங்கள், பாத்திரங்கள் மற்றும் பண்புகளைப்பற்றி கற்பியுங்கள் | பரலோக பிதாவுடனும் இயேசு கிறிஸ்துவுடனும் தங்களுடைய உறவைப் பெலப்படுத்த கற்பவர்களுக்கு உதவுங்கள் |
| இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியமளிக்கும் அடையாளங்களைத் தேடுங்கள் | இயேசு கிறிஸ்துவைப் போலிருக்க மனமுவந்து முயற்சி செய்ய கற்பவர்களுக்கு உதவுங்கள் |

**கிறிஸ்துவைப் போல போதிப்பதன் கொள்கைகள்**

| நீங்கள் கற்பிப்பவர்களை நேசியுங்கள் . | பரிசுத்த ஆவியால் கற்பியுங்கள் | கோட்பாட்டைப் போதிக்கவும் | கருத்தாய் கற்குமாறு அழையுங்கள் |
|---|---|---|---|
| தேவன் அவர்களைப் பார்க்கிற வழியில் கற்பவர்களைப் பாருங்கள். | ஆவிக்குரிய ரீதியில் உங்களை ஆயத்தப்படுத்துங்கள். | இயேசு கிறிஸ்துவின் கோட்பாட்டை நீங்களே கற்றுக்கொள்ளுங்கள். | தங்கள் கற்றுக்கொள்ளுதலுக்கான பொறுப்பை ஏற்க கற்பவர்களுக்கு உதவுங்கள். |
| அவர்களைத் தெரிந்துகொள்ள நாடுங்கள், அவர்களின் சூழ்நிலைகள், தேவைகள் மற்றும் பெலன்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுங்கள். | கற்பவர்களின் தேவைகளைப்பற்றிய ஆவிக்குரிய தூண்டுதல்களுக்கு பதிலளிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். | வேதங்களிலிருந்தும் பிற்கால தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளிலிருந்தும் கற்பியுங்கள். | தினமும் சுவிசேஷத்தைப் படிப்பதன் மூலம் இரட்சகரை அறிந்துகொள்ளும்படி கற்பவர்களை ஊக்குவியுங்கள். |
| பெயர் சொல்லி அவர்களுக்காக ஜெபியுங்கள். | பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்படுவதற்கான பின்னணிகளையும் வாய்ப்புகளையும் கற்பவர்களுக்கு உருவாக்குங்கள். | வேதங்களிலுள்ள சத்தியங்களைத் தேடவும், அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்பவர்களுக்கு உதவுங்கள். | கற்றுக்கொள்ள ஆயத்தமாகுமாறு கற்றுக்கொள்பவர்களை அழையுங்கள். |
| அனைவரும் மதிக்கப்படுகிறார்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகள் மதிக்கப்படுகின்றன என்பதை அறிகிற, பாதுகாப்பான சூழலை உருவாக்குங்கள். | தனிப்பட்ட வெளிப்பாட்டைத் தேட, அடையாளம் காண மற்றும் செயல்பட கற்பவர்களுக்கு உதவுங்கள். | மனமாற்றத்திற்கும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கும் வழிவகுக்கும் சத்தியங்களில் கவனம் செலுத்துங்கள். | அவர்கள் கற்றுக் கொள்ளும் சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ள கற்பவர்களை ஊக்குவியுங்கள். |
| உங்கள் அன்பை வெளிப்படுத்த பொருத்தமான வழிகளைக் கண்டு பிடியுங்கள். | அடிக்கடி சாட்சியமளியுங்கள், தங்கள் உணர்வுகள், அனுபவங்கள் மற்றும் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ள கற்பவர்களை அழையுங்கள். | இயேசு கிறிஸ்துவின் கோட்பாட்டில் தனிப்பட்ட தொடர்பைக் கண்டறிய கற்பவர்களுக்கு உதவுங்கள். | அவர்கள் கற்றுக்கொண்டதின்படி வாழ கற்றுக்கொள்பவர்களை அழையுங்கள். |